# கோவில்பட்டி நகராட்சி

**மன்மத – விளம்பி வருடம் ஆவணி 15–ஆம் ஆங்கில வருடம் ஆகஸ்ட் மாதம் 31.08.2018–ம் தேதி வெள்ளிக் கிழமை விவாதித்து முடிவெடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ள சாதாரண கூட்டப் பொருள்களின் விபரம்**

| மன்ற கூட்ட தேதி | வரிசை எண் மற்றும் மன்றப்பொருள் | மன்றத் தீர்மானம் |
|---|---|---|
| 31.08.2018 | **பொருள் எண்: 1**<br><br>கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான தினசரி சந்தையில் வாகன நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 31.07.2018ம் தேதியில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றது. மேற்காணும் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில், ஓராண்டு குத்தகை ரூ.36,36,000/–ற்கு திரு.எஸ்.பால்ராஜ் என்பவர் உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். குறைந்தபட்சமாக திரு.M.T.M.ரவீந்திரராஜன் என்பவரால் ரூ.35,01,000/– க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். எனவே உயர்ந்தபட்ச ஓராண்டு குத்தகை தொகை ரூ.36,36,000/–ற்கு கோரிய திரு.எஸ்.பால்ராஜ் என்பவருக்கு கோவில்பட்டி நகராட்சி தினசரி சந்தையில் வாகனம் நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்தினை 01.08.2018 முதல் 31.07.2021வரை மூன்றாண்டு காலத்திற்கு குத்தகை இன பொது ஏலம் நிபந்தனைகளின்படி, நடத்தி கொள்ளும் உரிமம் ஒப்படைப்பு செய்வதற்கு மன்ற தீர்மான எண்.3190, நாள்.31.07.2018 ல் மன்றம் அனுமதி வழஙகப்பட்டுள்ளது.<br>மேற்காணும் குத்தகை இனத்திற்கு குத்தகை நிபந்தனைகள் வரிசை எண்.15ன்படி குறைந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு.M.T.M.ரவீந்திரராஜன் என்பவரால் 31.07.2018ல் ஆட்சேபணை செய்து மறுஏலம் கோருவதற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.36,36,000/–ற்கு 25% அதிகமாக உள்ள பணத்தை ரொக்கமாக 01.08.2018ம்தேதி செலுத்தி விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்.<br>மேற்படியார் விண்ணபத்தில் தெரிவித்துள்ளவாறு அதற்கான பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி குத்தகை ஏல நிபந்தனைகள் வரிசை எண்.15ன்படி குத்தகை முன்வைப்புத் தொகை நகராட்சி கருவூலகத்தில் ரொக்கமாக செலுத்தி ஆட்சேபணை செய்துள்ளதால் மேற்காணும் குத்தகை இனத்திற்கு மன்ற தீர்மான எண்.3190, நாள்.31.07.2018 ல் மன்றம் அனுமதி வழஙகப்பட்டுள்ளதை ரத்து செய்துவிட்டு மறுஏலம் கோருவதற்கு மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது,<br>ந.க.எண்.9856/2015/அ3 | 3204<br>அனுமதிக்கப் பட்டது. |

**பொருள் எண்: 2**

3205 அனுமதிக்கப் பட்டது.

கோவில்பட்டி நகராட்சி எல்கைக்குட்பட்ட எட்டையாபுரம் சாலையில் ஆணையாளர் குடியிருப்பு கட்டிடம் கட்டுவதற்கான Structural design (கம்பி வடிவமைப்பு) பெறுவதற்கு மண் பரிசோதனை செய்து அறிக்கை பெறுவதற்கும், மேலும் மண் பரிசோதனை செய்வதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.27,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழஙகலாம்.

**பொருள் எண்: 3**

3206 அனுமதிக்கப் பட்டது.

கோவில்பட்டி நகராட்சியில் குடிநீர் அபிவிருத்தி மேம்பாட்டு திட்டபணிகளில் முக்கியமான பகிர்மான குழாய் பதிக்கும் பணி விரைவில் நடைபெற இருப்பதால் சாலையை தற்சமயம் பராமரிப்பு செய்ய இயலாது. மேலும் அதே சாலையில் மிகவும் உடைந்த நிலையில் உள்ள சிறுபாலத்தினை புதிதாக அமைத்து கொடுப்பதற்கும், மேலும் வள்ளுவர்நகரில் 6வதுதெருவில் உள்ள உடைந்த பாலத்தினையும் பொதுமக்களின் நலன் கருதி புதியதாக அமைப்பதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.0.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழஙகலாம்.

**பொருள் எண்: 4**

3207 அனுமதிக்கப் பட்டது.

இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட வார்டு எண்.29, ஸ்ரீராம்நகர் 4வது மற்றும் 5வதுதெரு, ஜவகர்லால்நேருதெரு, வார்டு எண்.32, வக்கீல்தெரு, வார்டு—6, வேலாயுதபுரம், 2வதுதெரு, மயாணரோடு, 5வதுதெரு, சாத்தூர் மெயின்ரோடு ஆகிய பகுதிகளில் தெருவிளக்கு பொருத்தப்படாத மின்கம்பங்களில் மின்கம்பியாளரின் குறிப்பின்படி மேற்கண்ட இடஙகளில் புதிய தெருவிளக்குகள் பொருத்த மின்சார வாரியத்திடம் மதிப்பீடு பெற மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதி வழஙகலாம்.

**பொருள் எண்: 5**

3208 அனுமதிக்கப் பட்டது.

இந்நகராட்சி பொதுசுகாதார பிரிவு TN69R4957 டிப்பர் லாரி வாகனத்திற்கு 23.08.2018—ல் தகுதி சான்று காலம் முடிவடைவதால், தகுதி சான்று பெற வாகனத்திலுள்ள பழுதுகளை சரி செய்ய பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு 14.08.2018—ல் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | N.A.ரஹ்மத்துல்லா ஆட்டோ மெபைல் ஒர்க்ஸ், எட்டையாபுரம் ரோடு, கோவில்பட்டி. | 90050 |
| 2. | சித்திக் ஆட்டோ மெபைல் ஒர்க்ஸ் & சர்வீஸ் லூபிரிகேசன்ஸ், எட்டையாபுரம் ரோடு, கோவில்பட்டி. | 98750 |

வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்த கோவில்பட்டி எட்டையாபுரம் ரோடு ரஹ்மத்துல்லா நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். செலவினத் தொகை மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | அலுவலக குறிப்பு:- (அ) பொதுசுகாதார அவசர அவசியத்தை முன்னிட்டு ஒப்பந்தப்புள்ளி கோரியதையும், குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த கோவில்பட்டி ரஹமத்துல்லா நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.3284/2018/எச்1 | |
| | **பொருள் எண்: 6**<br>நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது அலுவலக ந.க.எண்.13193/2017–LA1, நாள்.27.03.2018–ம் தேதிய கடிதத்தில் 05.12.2018ம் தேதிய அரசு தலைமை செயலாளர் அவர்களது தலைமையில் அனுமதியற்ற மனைப்பிரிவுகள் முறைப்படுத்துதல் திட்டம் 2017ன் கீழ் விற்பனை செய்யப்பட்ட தனித்த மனைகளை முறைப்படுத்துதல் சம்பந்தமாக வழிமுறைகள் அறிமுகப்படுத்துதல் தொடர்பான ஆய்வு கூட்ட அறிவுரைகளில் கண்டுள்ளபடி, நகர் ஊரமைப்பு துறையினால் மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழஙகப்பட்ட உடன் தனித்த மனைகளுக்கு முறைப்படுத்துதல் உத்தரவு வழஙகுவதற்கு முன்பாக உள்ளாட்சி ஆனது மேற்கண்ட இடத்தினை ஆய்வு செய்து மேற்படி மனைப்பிரிவிலுள்ள சாலைகளை ஏற்றுக்கொள்ள தீர்மானம் இயற்ற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்நகராட்சி எல்கையினுள் அமைந்துள்ள பசுவந்தனை தெருவில் டவுண் சர்வே வார்டு–E, பிளாக் எண்.10, மற்றும் நகரளவை எண்.33/1 மற்றும் 5ல் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு ம.வ.(மு)/ம/(திலி)/14/2018 எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் ந.க.எண்.277/2018, நாள்.16.03.2018 மண்டல நகரமைப்பு திருநெல்வேலி அவர்களால் உத்தரவு வழஙகப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மற்றும் உத்தரவு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. எனவே, மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளை நிலையில் உள்ளவாறு நகராட்சி தன்வசம் ஏற்றுக் கொள்ளவும் மற்றும் சர்வே ஆவணஙகளில் உட்பிரிவு செய்து நகராட்சி சாலையாக பெயர் மாற்றம் செய்திட வருவாய் துறைக்கு அனுப்பி வைத்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1901/2018/எப்1) | 3209<br>அனுமதிக் கப்பட்டது. |
| | **பொருள் எண்: 7**<br>கோவில்பட்டி நகராட்சியில் Swachh Bharat Mission 2018–19ன் கீழ் தினசரி சேகரமாகும் திடக்கழிவுகளை MSW Rules 2016ன்படி பிரித்து முறையாக கையாளுதல் மற்றும் மறுபயன்பாட்டிற்கு கொண்டு வருவதன் தொடர்பாக திடக்கழிவுகளை முறைப்படுத்துதல் மற்றும் உட்கட்டமைப்பு அதாவது சுற்றுச்சுவர் சாலை பணியினை மேற்கொள்ள கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ள Swachh Bharat Mission 7வது மாநில உயர்மட்ட குழுவின் 13.08.2018ன்படி மன்றத்தின் அனுமதிக்கு. வைக்கப்படுகிறது. | 3210<br>அனுமதிக்க ப் பட்டது. |

| Name of the component | Sl. No. | Name of work | Estimate amount (Rs.in lakhs) |
|---|---|---|---|
| Micro Compost Centre | 1. | Construction of MCC for 4TPD at Ammaunavagam back side. | 45.00 |
| | 2. | Construction of MCC for 4TPD at New Busstand | 45.00 |
| | 3. | Construction of MCC for 4TPD at Pudhugramam | 45.00 |
| | 4. | Construction of MCC for 4TPD at Urani Street. | 45.00 |
| | 5. | Construction of MCC for 2TPD at Veeravanchi Nagar. | 30.00 |
| | 6. | Construction of 2TPD at Subramaniyapuram | 30.00 |
| | | **Total** | **240.00** |
| Infrastructure for MCC | 7. | Construction of Compoundwall for proposed MCC for 4 TPD @ New busstand. | 16.00 |
| | 8. | Construction of compound wall for proposed MCC for 2TPD at Urani Street | 9.50 |
| | 9. | Construction of compound wall for proposed MCC for 2TPD at Pudhugramam | 16.00 |
| | 10. | Construction of compound wall for proposed MCC for 2TPD at Veeravanchi Nagar | 12.00 |
| | 11. | Construction of compoundwall for proposed MCC for 2 TPD at Subramaniyapuram | 12.00 |
| | 12. | Providing paverblock pavement for proposed MCC at Pudhugramam | 13.20 |
| | | **Total.** | **78.70** |
| | | | |

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்: 8**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களால் **02.03.2018** முதல் **12.03.2018** வரை நடத்தப்பட்ட ஆய்வு கூட்ட நடவடிக்கையின்படியும், **13.03.2018**ம் தேதிய **7**வது மாநில உயர்மட்ட குழுவின் ஆலோசனையின் அறிக்கையின்படி, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித எண்.**22866/2018**/பி3 **20.08.2018**ம் தேதிய கடிதத்தின்படி கோவில்பட்டி நகராட்சி எல்கைக்கு உட்பட்ட கிருஷ்ணாநகர் பகுதியில் அமைந்துள்ள பழைய உரக்கிடஙகில் உள்ள குப்பைகளை Bio—Mining முறையில் முழுமையாக அப்புறப்படுத்துவதற்கு உரிய மதிப்பீடு தயார் செய்து சமர்ப்பிக்க அறிவுறுத்தியதின்படி குப்பைகளை முழுமையாக அப்புறப்படுத்த ரூ.**154.00**லட்சம் மதிப்பீட்டில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளமைக்கு கருத்துரு அனுப்புவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

மன்றம் இப்பணியை ஒதுக்கீடு செய்யப்பட்ட தூய்மைபாரத இயக்கம் **2018–19**ன் கீழ் செய்ய அனுமதிக்கலாம்.

**3211**
அனுமதிக்கப் பட்டது.

**பொருள் எண்: 9**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் திடக்கழிவு மேலாண்மை சம்பந்தமான கலந்தாய்வு கூட்ட நாள்.**2.3.18,12.3.18** மற்றும் **7–**வதுமாநில உயர்மட்ட குழுவின் அறிக்கையின்படியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் **22866/2018/**பி**3 20.08.2018**ம் தேதிய கடிதத்தின்படியும் SBM **2018–19** திட்டத்தின்கீழ் கோவில்பட்டி நகராட்சி பகுதியில் சிறிய அளவிலான உரக்கிடங்குகளை அமைத்து குப்பைகளை முறையாக பிரித்து மறுசுழற்சி பயன்பாட்டிற்கு கொண்டு வருவதற்கு Micro Compost Centre மற்றும் அதற்குரிய வாகனங்கள் வாங்குவதற்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையில் Micro Compost Centre மற்றும் இதர சுற்றுசுவர் வசதிக்கு ரூ.**318.70** லட்சத்தில் வாகனங்கள் ரூ.**95.67** லட்சத்தில் வாங்குவதற்கும் உரிய திட்ட அறிக்கை அனுப்புவதற்கு மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வேண்டப்படுகிறது.

| Sl. No. | Name of the component | Name of work | Estimate cost (Rs.in lakhs) |
|---|---|---|---|
| 1. | Micro Compost Centre with other infrastructure facilities | Construction of Micro compost processing centre for 4 TPD Capacity with necessary compound wall @ amma unavagam backside in Kovipatti Municipality. | 61.00 |
| 2. | | Construction of Micro compost processing centre for 4 TPD capacity with necessary compound wall @ new busstand in Kovilpatti Municipality | 54.50 |
| 3. | | Construction of Micro compost processing centre for 4 TPD capacity with necessary compound wall @ urani street in Kovilpatti Municipality | 57.00 |
| 4. | | Construction of Micro compost processing centre for 2 TPD capacity with necessary compound wall @ Veeravanchi nagar in Kovilpatti Municipality | 44.00 |
| 5. | | Construction of Micro compost processing centre for 4 TPD capacity with necessary compound wall @ Pudhugramam in Kovilpatti Municipality | 57.00 |
| 6. | | Construction of Micro compost processing centre for 2 TPD capacity with necessary compound wall @ Subramaniapuram in Kovilpatti Municipality | 45.20 |
| | | | **318.70** |

3212
அனுமதிக்கப் பட்டது.

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | | Purchase of 25 Nos of battery operated vehice as per specification | 45.00 | |
| 8. | Procurement of primary collection vehices | Purchase of 9 Nos of light commercial vehice 2 cu.m capacity as per | 50.67 | |
| | | **Total** | **95.67** | |

அலுவலக குறிப்பு –

மன்றம் இப்பணியை ஒதுக்கீடு செய்யப்பட்ட தூய்மைபாரத இயக்கம் 2018–19 நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம்.

---

**பொருள் எண்: 10**

3213 அனுமதிக்கப் பட்டது.

நகர் ஊரமைப்பு ஆணையர், சென்னை அவர்களது அலுவலக ந.க.எண்.13193/2017–LA1, நாள்.27.03.2018–ம் தேதிய கடிதத்தில் 05.12.2018ம் தேதிய அரசு தலைமை செயலாளர் அவர்களது தலைமையில் அனுமதியற்ற மனைப்பிரிவுகள் முறைப்படுத்துதல் திட்டம் 2017ன் கீழ் விற்பனை செய்யப்பட்ட தனித்த மனைகளை முறைப்படுத்துதல் சம்பந்தமாக வழிமுறைகள் அறிமுகப்படுத்துதல் தொடர்பான ஆய்வு கூட்ட அறிவுரைகளில் கண்டுள்ளபடி, நகர் ஊரமைப்பு துறையினால் மனைப்பிரிவிற்கு கொள்கை அளவிலான ஒப்புதல் வழஙகப்பட்ட உடன் தனித்த மனைகளுக்கு முறைப்படுத்துதல் உத்தரவு வழஙகுவதற்கு முன்பாக உள்ளாட்சி ஆனது மேற்கண்ட இடத்தினை ஆய்வு செய்து மேற்படி மனைப்பிரிவிலுள்ள சாலைகளை ஏற்றுக்கொள்ள தீர்மானம் இயற்ற வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்நகராட்சி எல்கையினுள் அமைந்துள்ள அறிஞர் அண்ணா தெருவில் டவுண் சர்வே வார்டு–B, பிளாக் எண்.14, மற்றும் நகரளவை எண்.8ல் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவிற்கு ம.வ.(மு)/ம(திலி)/91/2018 எண்ணிடப்பட்டு கொள்கை அளவிலான ஒப்புதல் ந.க.எண்.4138/2018, நாள்.16.03.2018 மண்டல நகரமைப்பு திருநெல்வேலி அவர்களால் உத்தரவு வழஙகப்பட்டுள்ளது. மேற்படி வரைபடம் மற்றும் உத்தரவு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. எனவே, மேற்படி மனைப்பிரிவில் அமைந்துள்ள சாலைகளை நிலையில் உள்ளவாறு நகராட்சி தன்வசம் ஏற்றுக் கொள்ளவும் மற்றும் சர்வே ஆவணஙகளில் உட்பிரிவு செய்து நகராட்சி சாலையாக பெயர் மாற்றம் செய்திட வருவாய் துறைக்கு அனுப்பி வைத்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1902/2018/எப்1)

---

**பொருள் எண்: 11**

3214 அனுமதிக்கப் பட்டது.

கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கிழக்கு பகுதி தரைதள கடை எண்.1, வரி விதிப்பு எண்.137/1101 குத்தகை உரிமம் திரு.பே.ராஜகோபால் என்ற பெயரில் உள்ளது. மேற்கண்ட திரு.பே.ராஜகோபால் என்பவர் ரூ.50/– முத்திரைதாளில் தன்னுடன் கூட்டாக வியாபாரம் செய்து வரும் கடை எண்.1ன் உரிமதாரர் திருமதி.எஸ்.கார்த்திகாதேவி என்பவருக்கு கூட்டுவியாபார ஒப்பந்தத்தின் அடிப்படையில் கடை எண்.1ன் குத்தகை உரிமத்தை திருமதி.எஸ்.கார்த்திகாதேவி என்ற பெயருக்கு மாற்றிக்கொள்ள எவ்வித ஆட்சேபணை இல்லை என நோட்டரி பப்ளிக் மூலம் எழுதி கொடுத்து, மேற்கண்ட கடை எண்.1ன் உரிமத்தை பெயர் மாற்றம் செய்து கொள்ள சம்மத

| | | |
|---|---|---|
| | கடிதம் கொடுத்துள்ளார். திருமதி.எஸ்.கார்த்திகாதேவி என்பவர் அரசாணை (நிலை) 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (நநி4) துறை நாள் 03.07.2007ல் தெரிவித்துள்ளவாறு பெயர் மாற்றக் கட்டணம் ரூ.60000/– ரசீது எண்.3980 நாள்.13.08.2018 மற்றும் 12மாத வாடகை முன்வைப்புத் தொகையாக ரூ.9,24,000/–ரசீது எண் 4048 நாள் 16.08.2018ல் செலுத்தியுள்ளார். எனவே அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கிழக்கு பகுதி தரைதள கடை எண்.1ன் குத்தகை உரிமத்தினை திரு.பே.ராஜகோபால் என்ற பெயரிலிருந்து திருமதி.எஸ்.கார்த்திகாதேவி என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u> :– மேற்காணும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கிழக்கு பகுதி தரைதள கடை எண்.1, வரி விதிப்பு எண்.137/1101யை திரு.பே.ராஜகோபால் என்ற பெயரிலிருந்து திருமதி.எஸ்.கார்த்திகாதேவி என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு 13.08.2018ம் தேதியில் முன் அனுமதி வழஙகியதை மன்றம் அஙகீகரிக்கலாம்.<br>ந.க.எண். 3477/2018/அ3 | |
| | **பொருள் எண்: 12**<br>கோவில்பட்டி நகராட்சிக்கு சொந்தமான அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கிழக்கு பகுதி தரைதள கடை எண்.2, வரி விதிப்பு எண்.137/1102 குத்தகை உரிமம் திரு.பே.ராஜகோபால் என்ற பெயரில் உள்ளது. மேற்கண்ட திரு.பே.ராஜகோபால் என்பவர் ரூ.50/– முத்திரைதாளில் தன்னுடன் கூட்டாக வியாபாரம் செய்து வரும் கடை எண்.1ன் உரிமதாரர் திருமதி.எஸ்.கார்த்திகாதேவி என்பவருக்கு கூட்டுவியாபார ஒப்பந்தத்தின் அடிப்படையில் கடை எண்.1ன் குத்தகை உரிமத்தை திருமதி.எஸ்.கார்த்திகாதேவி என்ற பெயருக்கு மாற்றிக்கொள்ள எவ்வித ஆட்சேபணை இல்லை என நோட்டரி பப்ளிக் மூலம் எழுதி கொடுத்து, மேற்கண்ட கடை எண்.1ன் உரிமத்தை பெயர் மாற்றம் செய்து கொள்ள சம்மத கடிதம் கொடுத்துள்ளார். திருமதி.எஸ்.கார்த்திகாதேவி என்பவர் அரசாணை (நிலை) 92, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (நநி4) துறை நாள் 03.07.2007ல் தெரிவித்துள்ளவாறு பெயர் மாற்றக் கட்டணம் ரூ.60000/– ரசீது எண்.3980 நாள்.13.08.2018 மற்றும் 12மாத வாடகை முன்வைப்புத் தொகையாக ரூ.9,00,000/–ரசீது எண் 4053 நாள் 16.08.2018ல் செலுத்தியுள்ளார். எனவே அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கிழக்கு பகுதி தரைதள கடை எண்.2ன் குத்தகை உரிமத்தினை திரு.பே.ராஜகோபால் என்ற பெயரிலிருந்து திருமதி.எஸ்.கார்த்திகாதேவி என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு மன்றத்தின் அஙகீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:– மேற்காணும் அறிஞர் அண்ணா பேருந்து நிலையம் கிழக்கு பகுதி தரைதள கடை எண்.2, வரி விதிப்பு எண்.137/1102யை திரு.பே.ராஜகோபால் என்ற பெயரிலிருந்து திருமதி.எஸ்.கார்த்திகாதேவி என்ற பெயருக்கு பெயர் மாற்றம் செய்வதற்கு 13.08.2018ம் தேதியில் முன் அனுமதி வழஙகியதை மன்றம் அஙகீகரிக்கலாம்.<br>ந.க.எண். 3447/2018/அ3 | 3215<br>அனுமதிக்கப் பட்டது. |

**பொருள் எண்: 13**

3216
அனுமதிக்கப் பட்டது.

நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழஙகல் துறை, சென்னை. அரசாணை (Municipal Administration and Water Supply (MA.IV) Department) (Ms) எண்.73. நாள்.19.07.2018ன்படி, கோவில்பட்டி நகராட்சி பகுதிகளில் உள்ள குடியிருப்பு கட்டிடஙகள், வாடகை குடியிருப்பு கட்டிடஙகள், மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடஙகள் ஆகியவற்றிற்கு 01.04.2018 முதல் சொத்துவரி கீழ்கண்டவாறு உயர்வு செய்ய ஆணை வெளியிடப்பட்டது.

| இனம் | அரசாணை எண்.73ல் சொத்துவரி சீராய்வின்போது உயர்வு செய்ய பரிந்துரை செய்யும் சதவீதம் |
|---|---|
| குடியிருப்பு கட்டிடஙகள். | 50 சதவீதத்திற்கு மிகாமல். |
| வாடகை குடியிருப்பு கட்டிடஙகள். | 100 சதவீதத்திற்கு மிகாமல். |
| குடியிருப்பு அல்லாத கட்டிடஙகள். | 100 சதவீதத்திற்கு மிகாமல். |

மேலும், மேற்படி அரசாணையினை தொடர்ந்து நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழஙகல் துறை, சென்னை. அவர்களால் வெளியிடப்பட்ட அரசாணை ((Municipal Administration and Water Supply (MA.IV) Department) எண்.76. நாள்.26.07.2018ல் வாடகை குடியிருப்பு கட்டிடஙகளுக்கு சொத்துவரி உயர்வுக்கான பரிந்துரை சதவீதம் 100 என்பதை நீக்கம் செய்து திருத்தம் மேற்கொண்டு அரசாணை அட்டவணையில் நீக்கம் செய்து வெளியிட்டுள்ளது. எனவே இதன்படி நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.20555/2018/ஆர்1, நாள்.30.7.2018ன்படி சொத்துவரி சீராய்வு சதவீதப்பரிந்துரையின்படி மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டுள்ளது.

| இனம் | சொத்துவரி சீராய்வின்படி உயர்வு செய்ய பரிந்துரை செய்யும் சதவீதம் |
|---|---|
| குடியிருப்பு கட்டிடஙகள். | 50 சதவீதத்திற்கு மிகாமல். |
| குடியிருப்பு அல்லாத கட்டிடஙகள். | 100 சதவீதத்திற்கு மிகாமல். |

எனவே மேற்காணும்படி வரப்பட்ட அரசாணை மற்றும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு:</u>– மேற்கண்ட அரசாணைகளில் தெரிவிக்கப்பட்ட குடியிருப்பு கட்டிடஙகளுக்கு 50சதவீதம் மற்றும் குடியிருப்பு அல்லாத

<table>
<tr><td></td><td>கட்டிடங்களுக்கு 100சதவீதம் என 01.04.2018 முதல் வரிஉயர்வு செய்ய அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3060/2018/அ1)</td><td></td></tr>
<tr><td></td><td>பொருள் எண்: 14<br>நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழஙகல் துறை, அரசாணை (Ms) எண்.76. நாள்.26.07.2018ன்படி, 01.04.2018 முதல் சொத்துவரியினை உயர்வு செய்ய ஆணையிடப்பட்டு உயர்வு செய்யப்படும், மேற்காணும் விவரத்தினை பொதுமக்கள் அறியும் வண்ணம் பத்திரிக்கை மற்றும் ஆட்டோ ரிக்ஷா மூலம் விளம்பரம் செய்வதுடன், பொதுமக்களுக்கு சுயமதிப்பீட்டு படிவம் வழஙகி அதனை பூர்த்தி செய்து பெற வேண்டியுள்ளது. மேலும் சிறப்பு அறிவிக்கை (Special Notice), கணக்கீட்டுத்தாள் (Working Sheet) மற்றும் முதன்மைப் பதிவேடு (Master Register) தயார் செய்யப்பட வேண்டியுள்ளது. இந்நகராட்சியில் கீழ்க்காணும் விவரப்படி வரிவிதிப்புகள் உள்ளது.<br>
<table>
<tr><th>இனம்</th><th>வரி விதிப்பு எண்ணிக்கை.</th></tr>
<tr><td>வசூலிக்க வேண்டிய மற்றும் வழக்கு சம்மந்தப்பட்ட சொத்துவரி உள்ள கட்டிடஙகள்.</td><td>38973</td></tr>
<tr><td>தொழிற்சாலை இனஙகளில் சொத்துவரி உள்ள கட்டிடஙகள்.</td><td>118</td></tr>
<tr><td>வணிக இனஙகளில் சொத்துவரி உள்ள கட்டிடஙகள்.</td><td>3058</td></tr>
<tr><td>நிகர மொத்த குடியிருப்பு கட்டிடஙகள்.</td><td>42149</td></tr>
</table>
இதன்படி வரிவிதிப்புகள்.42149க்கு சுயமதிப்பீட்டு படிவஙகள், சிறப்பு அறிவிக்கை (Special Notice), கணக்கீட்டுத்தாள் (Working Sheet) மற்றும் முதன்மைப் பதிவேடு (Master Register) தயார் செய்வதற்கு தேவையான A4 மற்றும் Legal Size பேப்பர் வாஙகுவதற்கு அரசு அங்கீகாரம் தொழிற் கூட்டுறவு சஙகம் நிறுவனத்திலிருந்து ஒப்பந்தப்புள்ளி கோரி பெறவும், அதற்கான விளம்பரச் செலவு மற்றும் உத்தேச செலவு ரூ.15,00,000/– (பதினைந்து லட்சம்) லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.3060/2018/அ1)</td><td>3217<br>அனுமதிக்கப் பட்டது.</td></tr>
</table>

**பொருள் எண்: 15**

3218 அனுமதிக்கப் பட்டது.

பல்லுயிர்ச் சட்டம் 2002 மற்றும் பல்லுயிர் விதிகள் 2004ன் படி இந்நகராட்சியில் கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட பல்லுயில் மேலாண்மைக்குழு (Bio-Diversity Management Committee) அமைத்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | திரு.க. அச்சையா<br>ஆணையாளர்,<br>கோவில்பட்டி நகராட்சி. | தலைவர் |
| 2. | திரு.எஸ். சிவராம்<br>வனச்சரக அலுவலர்<br>கோவில்பட்டி | செயலாளர் |
| 3. | திரு.பி. மோகன்<br>1/3, பாரதிநகர், 2வதுதெரு,<br>கோவில்பட்டி | உறுப்பினர் |
| 4. | திரு.எஸ்.சண்முகராஜ்<br>வேலாயுதபுரம் 2வதுதெரு,<br>கோவில்பட்டி. | உறுப்பினர் |
| 5. | திருமதி.பி. தமிழரசி,<br>15பி, சுப்பிரமணியபுரம்,<br>3வதுதெரு, கோவில்பட்டி. | உறுப்பினர் (SC) |
| 6. | திருமதி.வி. இராணி,<br>27ஏ, ஜோதிநகர்,<br>1வதுதெரு, கோவில்பட்டி. | உறுப்பினர் (பெண்) |
| 7. | திருமதி.பி. லதா,<br>23/H6, ஜோதிநகர்,<br>2வதுதெரு,<br>கோவில்பட்டி. | உறுப்பினர் (பெண்) |

அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 1439/2018/எச்1)

**பொருள் எண்: 16**

3219 அனுமதிக்கப் பட்டது.

இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவு துப்புரவு பணியாளர்களுக்குத் தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் வாங்கி வழங்கிட 28.08.2018–ல் ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டு வரப்பெற்றுள்ளன. அதன் விபரங்கள் கீழ்கண்டவாறு

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | தொகை |
|---|---|---|
| 1. | S.R.எண்டர்பிரைசஸ்<br>18, பழைய வெல்தெரு<br>திருவொட்டியூர்<br>சென்னை–600 019 | 1.ஒளிரும் சட்டை (பிரிண்டுடன்) ஒன்றுக்கு ரூ.410/– + GST 18%<br>2. கையுறை ஒரு ஜோடி ரூ.390/– +GST 18% |
| 2. | ராஜேஸ்வரி L.நாதன் கெமிக்கல்ஸ் @ டிரேடர்ஸ்<br>15/90B, 2வதுமாடி<br>பெரம்பூர் ரோடு,<br>பெரம்பூர்<br>சென்னை – 600 011. | 1.ஒளிரும் சட்டை (பிரிண்ட்டுடன்) ஒன்றுக்கு ரூ.382/– + GST18%<br>2. கையுறை ஒரு ஜோடி ரூ.368/– + GST 18% |

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ராஜேஸ்வரி L.நாதன் கெமிக்கல்ஸ் @ டிரேடர்ஸ், சென்னை 600 011 நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம். செலவினத் தொகைக்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–

குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்த ராஜேஸ்வரி L.நாதன் கெமிக்கல்ஸ் @ டிரேடர்ஸ் @ டிரேடர்ஸ், சென்னை–600 011, நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். 3323/2018/எச்1)

**பொருள் எண்: 17** — 3220 அனுமதிக்கப் பட்டது.

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் ஓட்டுநராக பணிபுரிந்த திரு.மு.முத்துராஜ் 30.04.2018–ல் வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றார். அவருக்கு வழஙகப்பட வேண்டிய சிறப்பு சேமநலநிதி மற்றும் அரசு மானியத் தொகை ரூ.10,000/– வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 2083/2017/எச்1)

**பொருள் எண்: 18** — 3221 அனுமதிக்கப் பட்டது.

அரசாணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள்.19.07.2018 மற்றும் அரசாணை எண்.76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை, நாள்.27.07.2018ன்படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.20555/2018/ஆர்1 நாள்.30.07.2018ன்படியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920, அட்டவணை 4ல் உள்ள விதிகளில் கூறப்பட்டுள்ள அதிகாரஙகளின் கீழ், கோவில்பட்டி நகராட்சி சொத்துவரியினை 01.04.2018 முதல் மாற்றியமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்காணும் சொத்துவரி திருத்தம் செய்வது சம்பந்தமாக கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட சொத்து உரிமையாளர்கள் / குடியிருப்போர்கள் / குத்தகைதாரர்கள் ஆகியோர்களிடம் குடியிருப்பு கட்டிடத்திற்கு நீலநிற படிவம், வணிக

கட்டிடத்திற்கு இளம்சிவப்பு படிவம், தொழிற்சாலை கட்டிடத்திற்கு வெள்ளைநிற படிவம் ஆகிய சுயமதிப்பீட்டு படிவம் சமர்ப்பிக்கப்பட்டு **24.10.2018**ம் தேதிக்குள் திரும்ப பெறப்பட வேண்டும். எனவே மேற்காணும் படிவங்கள் அச்சிடுவதற்கு அரசு அங்கீகாரம் பெற்ற கூட்டுறவு சொசைட்டி மூன்று நிறுவனங்களிலிருந்து கீழ்க்காணும் விவரப்படி மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் மற்றும் முகவரி | . படிவம் | எண்ணிக்கை | தொகை ரூ. |
|---|---|---|---|---|
| 1. | The Thoothukudi District HI-Tech Printing and alied Service Industrical Co—Operative Society Limited, IND.No.Tuti.5 Kovipatti-628 501 | 2 பக்கம் | 1000 | 2000/– (+GST 18%) |
| 2. | Tamilnadu Multipurpose Service Industrial Co—Operative Society Ltd., Tiruchirappalli--620 008. | 2 பக்கம் | 1000 | 2250 (+GST 18%) |
| 3. | Tirunelveli District Multi Purpose Service Industrial Co—Operative Society Ltd., IND.No.TNY—2. | 2 பக்கம் | 1000 | 1750 (+GST 18%) |

<u>அலுவலக குறிப்பு</u>:-

மேற்காணும் விபரப்படி மூன்று நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்றுள்ள மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி சமர்ப்பித்துள்ள Tirunelveli District Multi Purpose Service Industrial Co—Operative Society Ltd., IND.No.TNY—2. என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று வேலை உத்தரவு வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3060/2018/அ1

---

**பொருள் எண்: 19**

3222 அனுமதிக்கப் பட்டது.

இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவு TN69R4926 டிப்பர் லாரி வாகனத்திற்கு 06.09.2018–ல் தகுதி சான்று காலம் முடிவடைவதால், தகுதி சான்று பெற வாகனத்திலுள்ள பழுதுகளை சரி செய்ய உத்தேச செலவினத் தொகை ரூ.90000/–க்கு மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:-

(அ) செலவினத் தொகைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ஆ) பொது சுகாதார அவசர அவசியத்தை முன்னதாக ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.3523/2018/எச்1

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்: 20**<br>கோவில்பட்டி நகராட்சி 36 வார்டு பகுதியிலும் தினசரி உற்பத்தியாகும் குப்பைகளில் மக்கும் குப்பை, மற்றும் மக்காத குப்பை அளவீட்டை பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களின் அறிவுறுத்தின்படி கோவில்பட்டி நகராட்சி குப்பைகளை பரிசோதனை செய்வதற்காக கோயமுத்தூர் Gree blink நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழஙகப்பட்டு அதற்குரிய உத்தேச செலவின தொகை ரூ.30,000/– மன்றம் அனுமதிக்காக வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம். | 3223<br>அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 21**<br>தூய்மை இந்தியா திட்டம் கீழ் பரப்புரையாளர்கள் மேற்பார்வையாளர்கள் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.26458–I/2016/தி1, நாள்.31.07.2018 கடிதத்தில் தெரிவித்துள்ளபடி ஒப்பந்தப்புள்ளி விகிதப்படி மேலும் மூன்று மாதஙகளுக்கு கால நீட்டிப்பு அளித்து உத்தரவிடப்பட்டுள்ளது. இதற்கான ஊதியத்தொகை நகராட்சி பொதுநிதியிலிருந்து வழஙகிடவும், அரசிடமிருந்து நிதி பெறப்பட்டவுடன் ஈடு செய்து கொள்ளவும் தெரிவித்துள்ளார். எனவே மூன்று மாத சம்பள ஊதியம் உத்தேச செலவு தொகை ரூ5.00 லட்சம் வழஙக மன்றம் அனுமதிக்காக வேண்டப்படுகிறது. .<br><u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண். 6740/2017/எச்1 | 3224<br>அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 22**<br>கோவில்பட்டி நகராட்சியில் பணிபுரியும் அனைத்துப்பிரிவு பணியாளர்களுக்கும் (சுகாதாரப் பணியாளர்கள் உட்பட) 2018–2019ம் ஆண்டிற்கான அடையாள அட்டை தயாரித்து வழஙக உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக அலுவலகப் பணியாளர்களை புகைப்படம் எடுத்து, அடையாள அட்டை தயாரிக்கும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.20,000/–க்கு (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதி அளிக்கலாம். | 3225<br>அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 23**<br>கோவில்பட்டி நகராட்சியின் கீழ் இயஙகும் 5 நகராட்சி பள்ளிகளில் பயிலும் சுமார் 750 மாணவ, மாணவியர்களுக்கு 2018–2019ம் கல்வி ஆண்டிற்கான அடையாள அட்டை தயார் செய்து அளித்திட உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காக மாணாக்கர்களை புகைப்படம் எடுத்து, அடையாள அட்டை தயார் செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.40,000/–க்கு (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம். | 3226<br>அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்: 24**<br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி ஆகியோர்களின் உத்தரவின்படி கோவில்பட்டி நகர் பகுதியில் 60 இடங்களில் Onsite Compost உரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. மேலும் 6 இடங்களில் MCC உரம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. மேற்படி தயாரிக்கப்பட்ட உரம் மற்றும் மண்புழு மூலம் தயாரிக்கப்படும் உரம் உள்ளூர் விவசாயிகளுக்கு கீழ்கண்டவாறு விலை நிர்ணயம் செய்து வழங்க அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. மண்புழு உரம் கிலோ 1–க்கு – 5 ரூபாய்<br>2. இயற்கை (MCC மூலம்) உரம் 1 மெட்ரிக் டன்னிற்கு – 500 ரூபாய்<br><u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2407/2018/எச்1) | 3227<br>அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 25**<br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுறுத்தலின்படி இந்நநராட்சி எல்லைக்குட்பட்ட வெஙகடேஷ்நகர், ஸ்ரீராம்நகர் பூஙகா மற்றும் ஜோதிநகர் (காமராஜர் அவென்யூ) பூஙகாவில் நுண்உரம் தயாரிக்கும் களம் மற்றும் ஷெட்அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு செலவினத் தொகை ரூ.3.00இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம். | 3228<br>அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 26**<br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட பாரதிநகர் நடுநிலைப்பள்ளியில் சேகாரம் ஆகும் குப்பைகளை பள்ளி வளாகத்தில் பதப்படுத்தி நுண்உரம் தயாரிக்கும் களம் மற்றும் ஷெட் அமைக்கும் பணிக்கு மதிப்பீட்டு செலவினத் தொகை ரூ.1.05 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- கல்வி நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | 3229<br>அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 27**<br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்டஅறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் பொதுமக்கள் நலன் கருதி இருசக்கர வாகனம் உள்ளே வராத வண்ணம் பைப் பொருத்தவும், பயணிகள் அமருவதற்கு சிமெண்ட் கான்கிரீட் சிலாப் அமைத்து கிரானைட் கல் பதிக்கவும், மேலும் ஆஙகாஙகே பழுதடைந்த சிமெண்ட் கான்கிரீட் தளத்தினை அகற்றிவிட்டு புதிதாக சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்கவும் அதற்கான உத்தேச மதிப்பீடு செலவினத் தொகை ரூ.3.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u>:- மன்றம் அனுமதிக்கலாம். | 3230<br>அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண்: 28**<br>பொதுசுகாதாரப் பிரிவு கோவில்பட்டி நகராட்சி பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை மேற்கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டு வந்த வாகனம் TN69R4954 தகுதிகாண் சான்று பெறுவதற்காகவும், பழுதுகளை நீக்கம் செய்யும் பொருட்டு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எனவே பொதுசுகாதார பணியின் முக்கியத்துவம் கருதி தகுதிச்சான்று பெறுவதற்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனம் தகுதி சான்று பெற்று திரும்பும்வரை தனியாரிடம் வாடகைக்கு டிப்பர் டிராக்டர் ஒன்றினை அமர்த்தி பணிகளை மேற்கொள்ள உத்தேச செலவினத் தொகை ரூ.75,000/– (எழுபத்து ஐந்தாயிரம்) மன்றம் அனுமதிக்காக வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.3760/2018/எச்1 | 3231<br>அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 29**<br>இந்நகராட்சிப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்கள் சுமார் 650 நபர்கள் மற்றும் இ.வ்லுவலகப் பணியாளர்கள் 300 நபர்கள் சேர்த்து 950 நபர்களுக்கு புகைப்படம் எடுத்து அடையாள அட்டை தயார் செய்யும் பணிக்கு கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றன.<br>1. அஞ்சலி வீடியோஸ் & போட்டோ<br>(நபர் ஒருவருக்கு) .. ரூ.70.00 (எழுபது)<br>2. ரோஸ் வீடியோஸ் & டிஜிட்டர் ஸ்டுடியோ<br>(நபர் ஒருவருக்கு) .. ரூ.50.00 (ஐம்பது)<br>3. அமுதா டிஜிட்டல் ஸ்டுடியோ<br>(நபர் ஒருவருக்கு) .. ரூ.60.00 (அறுபது)<br>மேற்சொன்னவாறு வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் ரோஸ் வீடியோஸ் & டிஜிட்டல் ஸ்டுடியோ நிறுவனம் கொடுத்த விலைப்புள்ளி குறைவாக இருப்பதினால் அதனை ஏற்றுக்கொண்டு பணி உத்திரவு வழங்கி அதனை அங்கீகரிக்கலாம்.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் அங்கீகரிக்கலாம். | 3232<br>அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 30**<br>இந்நகரரட்சிக்கு சொந்தமான காந்திநகர் உயர்நிலை பள்ளியில் சேகரமாகும் குப்பைகளை பதப்படுத்தி நுண் உரமாக மாற்றம் செய்யும் Onsite Micro Compost வசதி செய்வதற்கும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.10லட்சத்திற்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் இப்பணியை கல்வி நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம். | 3233<br>அனுமதிக்கப் பட்டது. |
| | **பொருள் எண்: 31**<br>இந்நகரரட்சிக்கு சொந்தமான புதுரோடு நகராட்சி பள்ளியில் குப்பைகளை பதப்படுத்தி நுண்உரம் தயாரிக்கும் Onsite Compost வசதி செய்வதற்கு அனுமதியும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1.10 லட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு:- மன்றம் இப்பணியை கல்வி நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம். | 3234<br>அனுமதிக்கப் பட்டது. |

| | | |
|---|---|---|
| | <u>**பொருள் எண்: 32**</u><br>இந்நகரரட்சி எல்லைக்குட்பட்ட ஊரணித் தெருவில் அமைந்துள்ள காமராஜர் சிற்றஙகாடி கட்டிடத்தை இடித்து அப்புறப்படுத்த அதற்கான உத்தேச மதிப்பீடு செலவினத் தொகை ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u> மன்றம் அனுமதிக்கலாம். | 3235<br>அனுமதிக்கப் பட்டது. |
| | <u>**பொருள் எண்: 33**</u><br>கோவில்பட்டி நகராட்சி எல்லைக்குட்பட்ட சுப்பிரமணியபுரம் பகுதியில் அமைந்துள்ள கழிப்பிடத்தை மக்கள் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளதால் மண்புழு உரம் தயாரிக்கும் களமாக மாற்றி அமைக்க அதற்கான உத்தேச மதிப்பீடு செலவினத் தொகை ரூ.70,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u> மன்றம் அனுமதிக்கலாம். | 3236<br>அனுமதிக்கப் பட்டது. |
| | <u>**பொருள் எண்: 34**</u><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி பயன்பாட்டில் இல்லாத வார்டு–2, பாலன்தெருவில் உள்ள கழிப்பிடத்தினை இடித்து அப்புறப்படுத்திடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.0.50 லட்சத்திற்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u> மன்றம் இப்பணியை பொது நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம். | 3237<br>அனுமதிக்கப் பட்டது. |
| | <u>**பொருள் எண்: 35**</u><br>நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அறிவுறுத்தலின்படி பயன்பாட்டில் இல்லாத ஆழ்வார்தெரு கழிப்பிடத்தினை Onsite Compost க்கு மாற்றம் செய்யவும், அதற்கான உத்தேச செலவீனம் ரூ.0.70 லட்சத்திற்கும் மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u> மன்றம் இப்பணியை பொது நிதியின் கீழ் செய்ய அனுமதிக்கலாம். | 3238<br>அனுமதிக்கப் பட்டது. |